மூதூர் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 25ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 13ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 20 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மூதூர் பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) புதிய பஸ் நிலையத்தின் 38 கடைகளுக்கும் பொதுச்சந்தையின் 53 கடைகளுக்குமாக மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய வாடகைகள் முறையே ரூபா 228,000 மற்றும் ரூபா 316,195 தொகைகள் பெறுமதியிடப்பட்டு கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடந்த ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 400,007 நூலக புத்தகக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான ரூபா 17,615 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1984 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு நிலுவையாகவுள்ள ரூபா 11,479,985 கூட்டு மொத்தத் தொகையான அரசிறைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக நிலுவையாகக் காட்டப்பட்டு வருகின்றன.

(ஆ) 32 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 244,644 கூட்டு மொத்தத் தொகையான கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2007 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் நிலுவை பணியாளர் கடனாகக் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை.

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| காணிகளும், கட்டடங்களும் | 37இ868இ086 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதிகள் இயந்திரங்கள் | 963இ531 | நிலையான சொத்துப் பதிவேடுகள், |
| தளபாடங்கள் | 28இ916இ570 | மற்றும் மெய்மையாய்வுச் சபை |
| கடைத்தொகுதி | 4இ967இ426 | அறிக்கைகள் |
| மோட்டார் வாகனம் | 1இ029இ520 | |
| முற்பணக் கொடுப்பனவு | 10இ725இ435 | முற்பணப் பதிவேடு |
| நிலுவை வீத வரிகள் | 4இ576இ098 | வீதவரிகள் பதிவேடு |
| கேள்வி வைப்பு | 1இ625இ000 | கேள்வி வைப்புப் பதிவேடு |

1.3.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவு | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனம் கண்டு அவற்றின் ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்

(i) அத்தியாயம் ஐ இன் பிரிவு 5 (ஒஐஐ) — பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) அத்தியாயம் ஐஐஐ இன் பிரிவு 81 — காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச்செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அத்தியாயம் ஒ இன் பிரிவு 193 — ஐ ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) கிழக்கு மாகாண நிதி ஒழுங்கு விதி

விதி இலக்கம் 237 — இரண்டு வருடங்களுக்கு முன்னர் சபையால் வழங்கப்பட்ட ரூபா. 20,667 கூட்டுமொத்த பெறுமதியான பதினொரு காசோலைகள் பணமாக மாற்றுவதற்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத போதிலும் அவை தொடர்பாக உரிய ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு.

### 2.1 நிதி விளைவுகள்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.22,182,927 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.14,000,313 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா. 8,182,614 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமா்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2014 திசெம்பர் 31 இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 791,500 | 781,500 | 4,649,819 |
| வாடகை | 7,315,215 | 7,399,730 | 6,381,988 |
| சேவைகளுக்கான கட்டணம் | 9,566,000 | 7,903,305 | 10,054 |
| அரசிறை வருமானம் | 34,025,193 | 26,538,436 | 331,940 |
| | 51,697,908 | 42,622,971 | 11,373,801 |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 13 மோட்டார் வாகனங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கிற்கு கொண்டுவர பதினொரு ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா.22,820,738 கிரயத்தில் 40 சந்தைக் கடைகள் நிர்மாணிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 13 கடைகள் எதுவித வாடகையும் அறவிடப்படாது வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 27 கடைகளும் 2014 திசெம்பர் 18ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) 1988 ஆம் ஆண்டில் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட சேமிப்புக் கணக்கு மீதி ரூபா. 400,642 தொகைக்கு மீளாய்வாண்டின் போது ரூபா.16,965 வட்டி வருமானம் பெறப்பட்டிருந்தது. ஆனால் இம்மீதியானது ஒரு வருட நிலையான வைப்பிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தால் 9மூ வட்டி வருமானமாக ரூபா.36,057 தொகையை பெற்றிருக்க முடியும். இதனால் மீளாய்வாண்டில் ரூபா.19,092 வட்டி வருமான இழப்பு ஏற்பட்டுள்ளமை.

(ஈ) உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய 2010, 2011 ஆம் ஆண்டுகளுக்கான கட்டணம் ரூபா.48,000 தொகையை செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1986 ஆம் ஆண்டு தொடக்கம் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதி, விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதி என்பவை தொடர்பான ரூபா.355,405 தொகையான பங்களிப்பு பணத்தை உரிய நிதியங்களுக்கு அனுப்பி வைக்காமல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு பின்னர் வருமானத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) சபைக்குச் சொந்தமான கடைத்தொகுதியின் 53 கடைகளை வாடகைக்குப் பெற்றவர்களாலேயே இக்கடைகள் தொடர்ச்சியாக 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நடாத்தப்பட்டுவருகின்ற போதிலும் பிரதேச சபைச் சட்டத்தின் 173 ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறு வாடகைக்குப் பெற்றவர்களுடன் சபை இதுவரை உடன்படிக்கை செய்திருக்கவில்லை. எனவே தற்போது நிலவும் வாடகைப் பெறுமதியை கவனத்தில் கொள்ளாது 15 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட வாடகையான ரூபா. 1,800 தொடக்கம் ரூபா. 3,000 வரையான மிகக் குறைந்த வருடாந்த வாடகையே அறவிட்டு வருகின்றது. இதனால் வருடத்திற்கு ரூபா.1,621,800 தொகையான வருமானத்தை சபை இழந்துள்ளது.

மேலும் சபையிடம் கடைகளை வாடகைக்குப் பெற்ற நபர்கள் அக்கடைகளை மாதாந்தம் ரூபா.3,000 தொடக்கம் ரூபா. 5,000 வரையான வாடகைக்கு வேறு நபர்களுக்கு உப குத்தகைக்கு வழங்கியுள்ளமை தற்பொழுது அக்கடைகளை நடாத்துகின்ற நபர்களிடமிருந்து எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கூற்றுக்களின் மூலம் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

4. ஒப்பந்த நிர்வாகம்

(அ) மூதூர் புதிய பேரூந்து நிலையத்தின் கடைத்தொகுதி நிர்மாணம்

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் 40 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதி ஒன்றினை நிர்மாணிப்பதற்காக மூதூர் பிரதேச சபையால் 2012 சனவரி 21ஆம் திகதி ரூபா.22,820,738 பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குறித்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2012 ஒக்டோபர் 30ஆந் திகதி ஒப்பந்தக்காரரால் கட்டிடம் கையளிக்கப்பட்ட போதிலும் 2014 திசெம்பர் 18ஆம் திகதி மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது 04 கடைகளின் நான்கு சுவர்களிலும் 12 அடி நீளத்திற்கு வெடிப்புக்கள் காணப்பட்டதுடன் ஏனைய கடைகளின் சுவர்களிலும் சிறிய வெடிப்புக்கள் காணப்பட்டன. அத்துடன் கடைகளின் முகப்பு பக்கத்தில் உரிய முறையில் கொங்கிறீட் இடப்படாமையால் மழை காலங்களில் நீர் தேங்கி நின்று நீர்க் கசிவு ஏற்படுகின்றது.

இக்குறைபாடுகளை கவனத்தில் கொள்ளாது சபையினால் ஒப்பந்தக்காரருக்கு குறித்த நிர்மான வேலைக்காக மதிப்பிடப்பட்ட பணம் முழுவதும் செலுத்தப்பட்டதுடன் நிறுத்தி வைத்தல் பணமும் மீளக் கையளிக்கப்பட்டது.

(ii) மேற்குறித்த விடயம் தொடர்பாக 2013 ஆம் ஆண்டிற்கான எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட போதும் இன்று வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் அதிகளவு பணம் செலவு செய்யப்பட்டு நிர்மானிக்கப்பட்ட இக்கட்டிடம் இன்று வரை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) மூதூர் புதிய பேரூந்து நிலையத்தின் சந்தைக் கட்டிடம்

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா.23,366,108 பெறுமதிக்கு சந்தைக் கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக மூதூர் பிரதேச சபையால் 2013 ஆகஸ்ட் 27ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உடன்படிக்கையின்படி நிர்மாண வேலைகள் 2013 திசெம்பர் 26ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படவேண்டிய போதிலும் 2014 பெப்பிரவரி 25ஆம் திகதியே நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ii) அக்கட்டிடத்தில் 350 மீற்றர் நீளமான ீயசயிநவ றுயடட நிர்மாணிக்கப்பட்டு அதற்காக ரூபா.269,850 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 யூன் 24ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அச்சுவர் முழுமையாகச் சேதமடைந்திருந்ததுடன் இன்று வரை அது திருத்தியமைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அங்காடி வியாபாரத்திற்காக நிர்மானிக்கப்பட்ட இக்கட்டிடம் 2014 பெப்பிரவரி 25 ஆம் திகதியன்று பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் இன்று வரை உரிய நோக்கத்திற்காக அக்கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு அங்காடி வியாபாரத்திற்காக நிர்மானிக்கப்பட்ட இக்கட்டிடத்தை வியாபாரிகளுக்கு வியாபாரம் செய்வதற்கு வழங்காது வீதியின் இரு மருங்கிலும் அங்காடி வியாபாரம் மேற்கொள்வதற்கு பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்டு 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா.219,510 குத்தகைப் பணமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையால் நிர்மாணிக்கப்பட் சந்தைக் கட்டிடம் விளைவற்றுக் காணப்படுவதுடன் வீதியில் போக்குவரத்து செய்வதற்கு இடைஞ்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

5. மனிதவள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | -- | 01 |
| உதவியாளர்கள் | 29 | 26 | 03 |
| சிற்றூழியர்கள் | 76 | 66 | 10 |

செயலாளர் பதவி 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வெற்றிடமாகக் காணப்படுவதுடன் இவ் வெற்றிடத்திற்கு நிரந்தரமாக ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பதில் கடமை அடிப்படையில் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

6. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு